1978 செப்டம்பர் 2]

குறைந்தாலும்கூட ஆசிரியர்களின் பணிக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் சட்டத்தில் ஒரு நல்ல விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறையை தனியார் கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைக் குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : ஒரு கல்லூரி அல்லது பள்ளி நிருவாகம் ஊழல் புரியுமானால், அதைத் தாற்காலிகமாக அரசு எடுத்துக்கொள்ள சட்டத்திலே இடமிருக்கிறது. அப்படி எத்தனை ஆண்டுகள் அந்த நிருவாகத்தை எடுத்துக் கொள்ளலாம்? எத்தனை ஆண்டுகள் அவ்வாறு எடுத்துக்கொண்ட பின்னரும் ஊழல் நீக்கப்படாமலிருந்தால், அதற்கு விடிவு ஏதாவது உண்டா? அதற்கு அரசாங்கம் என்ன வழிவகை செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இரண்டு ஆண்டுக் காலம் வைத்துக்கொண்டிருக்கிறோம். மறுபடியும் திருப்பித் தர வேண்டும் என்கிற நிலைமையில்தான், திருப்பிக் கொடுக்கக்கூடாது என்கிற கோரிக்கைகள் இப்போது எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. இப்போதுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அது குறித்து அரசு பரிசீலித்து, நல்ல முறையில் நடக்க என்னென்ன தேவையோ அதை அரசு செய்யும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : ஊழல் காரணமாக அரசு இதுவரை சமீப காலத்தில் எடுத்துக்கொண்ட பள்ளிகள் எத்தனை? எடுத்திருந்தால், அவை களின் பெயர் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு அண்மையில் எடுத்துக் கொள்வதாக முடிவு செய்து உத்தரவு அனுப்பிய கல்லூரி நாகர்கோயிலில் உள்ள பயோனியர் குமாரசாமி கல்லூரி. ஆனால் அந்த உத்தரவை எதிர்த்து, வழக்கு மன்றத்தில் தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள் அதன் நிருவாகிகள்.

B.T. Assistants of Edward High School, Sattur

*22 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that B.T. Assistants serving in Edward High School, Sattur, Ramanathapuram district, have been subjected to losing their pay for the period of their participation in B.T. Teachers' Agitation during March 1973, in spite of G.O. Ms. No. 463, Education, dated 23rd March 1973; and

(*b*) if so, the reasons therefor?

[1978 செப்டம்பர் 2

சாத்தூர், எட்வர்டு உயர்நிலைப் பள்ளி பி.டி. ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 23—3—1973 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசாணையில் வேறுவிதமாகக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும், இராம நாதபுரம் மாவட்டம் சாத்தூரில் உள்ள எட்வர்டு உயர்நிலைப் பள்ளியில் பணி யாற்றும் பி.டி. ஆசிரியர்கள் 1973 மார்ச்சில் பி.டி. ஆசிரியர்கள் போராட்டத் தில் கலந்து கொண்டதற்காக அக்கால அளவுக்குரிய சம்பளம் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். அரசாணை நிலை எண் 463, கல்வி நாள் : 23-3-1973-ன்படி இரண்டு ஆசிரியர்களுக்கு 18—3—1973 அன்று ஒரு நாளைக்கும், ஒரு ஆசிரியருக்கு 8—3—1973 லிருந்து 18-3-1973 முடிய முழு வேலை நிறுத்த காலத்திற்கும் சம்பளம் இல்லா விடுப்பு வழங்கப் பட்டுள்ளது.

(இ) இவ்வாசிரியர்களுக்கு தங்கள் ஈட்டிய விடுப்பு இருப்பு கணக்கில் எதுவும் இருக்கவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் போராட்ட காலத்திற்கு முன்னதாக அந்தப் பகுதியில் 'லோகல் ஹாலிடே' என்று விடப்பட்ட சில தினங்களும் இந்தப் போராட்ட காலத்தோடு இணைக்கப்பட்டு அதன் காரணமாக அவைகளுக்கும் ஊதியம் பிடிக்கப்பட்டிருக்கிறது. போராட்ட காலத்திற்கு மட்டுமே ஊதியம் பிடிக்கப்பட வேண்டுமென்று அரசாணையை அமுல் செய்யாமல், போராட்ட காலத்திற்கு முன்பாக விடப்பட்ட லோகல் விடுமுறை நாட்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். இதைத் தவிர்க்க லோக்கல் விடுமுறை நாட்களைக் கழிக்க வேண்டும் என்று கூறி, அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா? ஏனென்றால் அங்கே உள்ள தணிக்கையாளர்கள் அந்த விடுமுறை நாட்களைக் குறைக்கக் கூடாது என்று கூறுவதாகக் கேள்விப்பட்டேன். அதனால் அந்த ஆசிரியர் களுக்கு ஊதிய இழப்பு அதிகமாக ஏற்படுகிறது. எனவே இந்த நிலையைச் சரி செய்ய அமைச்சர் அவர்கள் தகுந்த உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 2]

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணவர்களின் போராட்டத்தின் காரணமாக 7—3—1973 பிற்பகல் முதல் 11—3—1973 வரை விடப்பட்ட உள்ளூர் விடுமுறை பி.டி. ஆசிரியர்களின் போராட்டக் காலத்தோடு தொடர்ந்து இருப்பதால், முன் கூறப்பட்ட காலத்திற்கும், ஈட்டிய விடுப்போ அல்லது விதிகளின்படி எந்த விடுப்புப் பெறத் தகுதியுண்டோ அந்த விடுப்போ ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டுமென 1973--74 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் உள்ளூர் விடுமுறைக் காலத்தை வேலை நிறுத்த காலத்தோடு இணைக்க முடியாது என்பது. இதன் காரணமாக அப்பள்ளியின் செயலாளர் 8—3—1973 முதல் 18—3—1973 வரை, 8 பி.டி. ஆசிரியர்களுக்கும் ஒரு செயலகத் துறை ஆசிரியருக்கும் ஈட்டிய விடுப்பு வழங்கினர்.

திரு. பி. ஆர். தாமஸ் : அந்தப் போராட்ட காலத்திற்கு முன்னால் அந்தப் பகுதியிலே விடப்பட்ட விடுப்பை இத்தோடு இணைக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால், அந்த ஆணையைப் புதுப்பித்து, மாற்று ஆணை வழங்கி, அந்தக் காலத்தைத் தனியாக விட்டுவிட்டு, போராட்ட காலத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஈட்டிய விடுப்பு கொடுத்து அவர்களுக்கு இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது தணிக்கை அறிக்கையினுடைய அடிப்படையிலே எழுந்திருக்கிறது. சட்ட இலாக்காவோடு கலந்து கொண்டு வேண்டிய ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனட்சிசுந்தரம் : மாணவர்கள் பள்ளிக்கு வராத அல்லது போராட்டத்தின் காரணமாக விடப்பட்ட விடுமுறையில் ஆசிரியருடைய போராட்டத்தோடு கலந்து அதற்குரிய ஈட்டிய விடுப்பை அவர்கள் இழக்கக் கூடிய நிலை வருந்தத்தக்கதாகும். மாணவர்களுடைய போராட்டம் காரணமாக அந்தப் பள்ளி வேலை நிறுத்தி வைக்கப்பட்ட நாட்களை வேலை நாட்களாகக் கொண்டு அரசு கன்டோனேஷன் அளிக்கலாம். அதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தணிக்கை அறிக்கையிலே போட்ட உத்தரவு அது. ஆகவே சட்டத் துறையைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : தணிக்கை அறிக்கையின் பெயரால் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஊதியத்தை ஆசிரியர்களிடமிருந்து மீண்டும் பிடிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்குமானால், முன் கூட்டியே அவர்களுக்கு 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து, இதை ஏன் உங்களிடமிருந்து பிடித்துக்கொள்ளல் கூடாது என்று 'நேட்சுரல் ஜஸ்டிஸ்' அடிப்படையில் கேட்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி முறையான 'ஜஸ்டிஸ்' அடிப்படையில் செய்யப்படாமல், கல்வித் துறையிலே அவர்களின் சம்பளத்தைப் பிடித்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி, உரிய முறையிலே, நியாயம் வழங்கக்கூடிய முறையிலே 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து அந்த அடிப்படையிலே அறிக்கை கொடுத்து அமுல் படுத்தி, விவரங்கள் பெற்றதன் பிறகு, அதற்கான அறிக்கை கொடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : இதிலே இருக்கின்ற சிக்கல் தணிக்கை அறிக்கை என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தினுடைய கொள்கை என்றும் கருதுகிறேன். ஆகையால் கொள்கையளவில் அரசாங்கம் இந்தக் கொள்கையைத்தான் இந்த விஷயத்தில் கடைப்பிடிக்க வேண்டுமென்று வரையறுத்துவிட்டால், தணிக்கை அறிக்கை குறுக்கே வராது என்று நினைக்கிறேன். அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆகவேதான், சட்டத் துறையைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

Government High School, Thandarai.

* 23 Q. —THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of students studying in the Government High School at Thandarai (Pattabiram), Chingleput district;

(*b*) since how long a Headmaster was not posted to that school ; and

(*c*) the reasons for non-posting ?